சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
26.08.2020 புதன்கிழமை

## துன்னாலையில் சிக்கியது 300 லீற்றர் கோடா


யாழ்ப்பாணம், ஒக.26
நெல்லியடிப் பொலி ஸார் இன்று அதி காலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில், கசிப்பு உற்பத்தி யில் ஈடுபடுபட்ட ஒருவர் கைது 2

## வீடு புகுந்து வாள்வெட்டு: இருவர் சிகிச்சையில்

கிளிநொச்சி, ஒக.26
மதுபோதையில் வந்த வர்கள் வீடு புகுந்து வாள்வெட்டு நடத்திய தில் இருவர் படுகாயம டைந்து மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு கிளிநொச்சி, தருமபுரத்தில் நடந் துள்ளது. வாள்வெட்டுக்கு இலக் கானவர்கள் தருமபுரம் மருத்துவமனை யில் சேர்க்கப்பட் டுப் பின்னர் 2

# 13ஐ முற்றாக நீக்கி புதிய அரசமைப்பு

### ஒற்றையாட்சியை வலுப்படுத்த வேண்டுமென்கிறார் குணவங்க தேரர்



கொழும்பு, ஒக.26
அரசமைப்பின் 13 ஆவது திருத் தச் சட்டம் நீக்கப்பட்டு ஒற்றை யாட்சி முறைமையை மேலும் வலுப் படுத்தும் வகையில் புதிய அரசியல மைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று எல்லே குணவங்க தேரர் தெரிவித்தார். 2

## தருமபுரத்தில் நால்வர் கைது

கிளிநொச்சி, ஒக.26
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குளத்தில் சட்டவிரோத மான முறையில் மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் நேற்று இரு உழவி யந்திரங்கள் கைப் பற்றப்பட்டுள்ளன. 2

## இடைக்கால கணக்கறிக்கை நாளை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக.26
நாளை சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமை யில் நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில், ஆயிரத்து 700 பில்லியன் ரூபாவுக்கான இடைக்கால கணக்கறிக்கையை ஆளுங் கட்சி சபையில் முன்வைக்கவுள்ளது. அதன்பின்னர் இடைக் கால கணக்கறிக்கைமீதான விவாதம் ஆரம்பமாகி மாலை 6.30 மணிவரை நடைபெறும். மறுநாளும் விவாதம் இடம்பெறவுள் ளது. ஆளுங்கட்சி வசம் பெரும்பான் மைப்பலம் இருப்ப 2

## பல்கலை பாதுகாப்பு ஊழியர் போராட்டம்



யாழ்ப்பாணம், ஒக.26
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பாதுகாப்பு உத்தி யோகத்தர் நலன்பு ரிச் சங்கத்தால் கவன வீர்ப்புப் போராட் 2

## மைத்திரி வீட்டில் விசாரணைக் குழு

கொழும்பு, ஒக.26
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பிலுள்ள உத்தியோக பூர்வ இல்லத்துக்கு இன்று காலை சென் றுள்ளனர். மைத்திரிபாலவிடம் ஈஸ்ரர் 2

## கோப், கோப்பா குழுக்களின் உறுப்பினர்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஒக.26
பொது நிறுவனங்கள் தொடர் பான நாடாளுமன்றக் குழு (Cope), அரச கணக்குகுழு (Copa) ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் நாடா 2

## சம்பந்தனுக்கு திடீர் சுகவீனம்!

### நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு



கொழும்பு, ஒக.26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திரு கோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் திடீர் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள் ளார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ 2

## புதினம் தெரியுமோ

நேற்று சமூக வலைத்தளமான ருவிட்டரில் ஒரு பதிவு. 'ஊடகப் பேச்சாளர் பதவியில் மாற்றமில்லை' என்பதாக அந்தப் பதிவு கூட்டமைப்பின் ஊடகப்பிரிவு என்ற கணக்கில் வெளியாகியிருந்தது. ஆனால் உண்மையில் அது கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கு அல்ல. ஒரு பிரபலத்தின் அல்லது அமைப்பின் அல்லது கட்சியின் உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கைப் பேணுவதாக இருந்தால், அந்தக் கணக்கை ருவிட்டர் நிறுவனம் சில தரவுகளைப் பெற்றுக்கொண்டு, அந்தக் கணக்கின் பின்னால் 'சரி' என்ற அடையாளத்தை வழங்கி யிருக்கும். ஆனால் நேற்று 2

## போராட்டத்துக்கு ஆதரவு

### மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.26
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி நடத்தவுள்ள போராட்டத் துக்கு ஆதரவு தெரிவிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்துள் ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: இலங்கையில் தமிழ் இன விடுத லைப் போரின் காலத்தில் தம் உறவுகள் காணாமல் 2

## கோப், கோப்பா....

ளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இந்த முறை அதிகரிக்கப்படவுள்ளது. இந்த இரு குழுக்களிலும் ஆளுங் கட்சியின் சார்பில் 10 பேரும், எதிரணிகளின் சார்பில் அறுவருமாக மொத்தம் 16 பேர் அங்கம் வகித்தனர். இந்த நிலையில் ஆளுங்கட்சியின் சார்பில் மேலும் ஐவரையும், எதிரணிகளின் சார்பில் மேலும் மூவரையும் உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்படி குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது மேற்படி குழுக்களுக்கான உறுப்பினர்கள் பெயரிடப்பட லாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த இரு குழுக்களினதும் தலைமைப் பதவி எதிரணிக்கு அவசியம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சி யின்போது கோப் குழுவின் தலைவராக சுனில் ஹந்துன் நெத்தி செயற்பட்டார். (எ-44)

## துன்னாலையில்...

செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக் கப்பட்டது. துன்னாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரின் வீட்டில் இருந்து 300 லீற்றர் கோடா கைப்பற் றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை பருத் தித்துறை நீதிமன்றில் முற்ப டுத்து வதற்கான நடவடிக்கைகளை நெல்லி யடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ள னர். (எ-25)

## வீடு புகுந்து....

மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். பழனியாண்டி கோவிந்தகு மார் (வயது26), பழனியாண்டி சதீஸ்குமார் (வயது27) ஆகியோரே காயமடைந்துள்ளனர். இந்தச் சம்ப வம் தொடர்பாக தருமபுரம் பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர். வாள் ஒன்றும், கைபேசி ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தே கத்தின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-113)

## 13ஐ முற்றாக நீக்கி...

கொழும்பில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இன்று பல சர்வதேச அமைப்புகள் நாட்டுக்குள் வந்துள்ளன. எனவே, சர்வதேச பிரச்சினைகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் மகாநாயக்க தேரர்களும் பக்கபல மாக இருப்பார்கள். நாட்டுக்கு புதிய தொரு அரசமைப்பே தேவைப்படு கின்றது. நடைமுறையில் உள்ள அரசமைப்பில் சில சரத்துகளை இல்லாதுசெய்து, புதிய சரத்துகளை உள்வாங்கும் பணியை முன்னெ டுக்காது, முழுமையான தொரு மறுசீரமைப்பை மேற்கொண்டு புதிய அரசமைப்பை இயற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அரச மைப்பின் 13, 15,16, 17, 18 மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டங்கள் கட்டாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஜே.ஆர். ஆட்சிகாலத் தில் ஒற்றையாட்சி என்ற பதத்தை அரசமைப்பில் உள்வாங்குவதற்கு நானே நடவடிக்கை எடுத்தேன். அது மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக மரமொன் றின் கிளைகளை பாதுகாப்பதற்கு முதல் ஆணிவேரைப் பாதுகாக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் ஒற்றையாட்சி முறைமை பலப்படுத் தப்படவேண்டும். கடந்த நான் கரை வருடங்களில் நாட்டின் இதிகாசம், கலாச்சாரம், தேசிய வளங்கள் என்பன சீரழிக்கப் பட்டன. துறைமுகம் உள்ளிட்ட இடங்கள் விற்பனை செய்யப்பட்டன. நாட்டை 9 கூறுகளாக பிரிக்கும் விதத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட் டது. தேசிய கீதத்தை மாற்று வதற்கு முயற்சித்தனர், பௌத்த மதத்துக்கே முன்னு ரிமை என்ற விடயத்திலும் கைவைத்தனர். எனினும் மக்கள் இதனைத் தடுத்து நிறுத்தினர்-என்றார். (எ-44)



## மைத்திரி....

தாக்குதல் சம்பவம் தொடர்பான வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கா கவே அந்தப் பிரிவினர் அவரின் வீட்டுக் குச் சென்றுள்ளனர். ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வருமாறு முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவுக்குக் கடந்த வாரம் விடுக்கப் பட்டிருந்த அழைப்பை அவர் நிராக ரித்திருந்தார். தன்னால் விசாரணைக் குழுவுக்கு வர முடியாது எனவும், தனது வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தனது வீட்டுக்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் விசா ரணை குழுவுக்கு அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (எ-22)

## பல்கலை...

டம் ஒன்று இன்று நடத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு உத்தியோகத்தர் கூட்டுறவுத் தொழிற்சங்கத்துக்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தொற்றுக் காலத்தில் பல்கலையில் நடந்த திருட்டுக் கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தொழிற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர்த்து ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-111)

## போராட்டத்துக்கு....

ஆக்கப்பட்டமை தொடர்பில் உண்மையைக் கண்டறியாமல் துன்பத்தோடும் துயரத்தோடும் ஜனநாயக வழிகளில் நீதிகோரிப் பல ஆண்டுகளாய் போராடிக் கொண்டிருக்கும் உறவுகளோடு நாமும் நீதி கோரி நிற்போம், செயல்படுவோம்.

1958ஆம் ஆண்டு முதல் 1983 வரை இந்த நாட்டில் இடம் பெற்ற தமிழினத்துக்கு எதிரான பல இனக் கலவர காலங்களில் ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் இனப்படுகொ லைக்கு ஆளாக்கப்பட்டது மட்டுமல்ல காணாமலும் ஆக்கப் பட்டனர். 1972 - 1973 முதல் தமிழ் மக்களுக்கெதிரான இலங்கை இராணுவ அடக்கு ஒழுக்குமுறைகளுக்கு எதிராக ஆரம்பித்த ஆயுதப் போராட்ட காலத்திலும் 2009 காலப்பகுதி யில் போர் தீவிரமடைந்திருந்த வேளை அரசும், இராணுவமும் போருக்குள் அகப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்க ளுக்கு வாருங்களென அழைத்தன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி அரசு பதில் சொல்லக் கடமைப்பட்டது என்பது சர்வதேச மனித உரிமைகள் விதி முறைகளின் படி வலுவான நியாயப்பாடாகும். இதனடிப்படை யில் தான் காணாமலாக்கப்பட்டவர்கள் உறவுகள் அரசிடமும், சர்வதேசத்திடமும் நீதி கோரி நிற்கின்றனர். இதற்கு 2012லும் 2015லும் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வலுவாகவுள்ளன.இவற்றின் அடிப்படையிற்றான் அரசும் சர்வதேசமும் பதில் சொல்லும் கடப்பாட்டை நிறை வேற்ற வலியுறுத்தியும், நம்பகத் தன்மை வாய்ந்த நியாயத்தை யும் நீதியையும் மக்கள் கோருவதற்கு நாமனைவரும் அப் போராட்டங்களுடன் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டுமென் றும் கோருகின்றோம். என்றுள்ளது. (எ)

## சம்பந்தனுக்கு...

கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், கொறடா தொடர்பான பதவிகள் தொடர்பான இறுதித் தீர்மா னம் குறித்த அறிவிப்பு என்ன? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாளையும் நாளைமறுதினமும் நடைபெ றவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. குறித்த கூட்டத்தில் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவை அறிவிக்கப்படும் என்று கூட்டமைப் பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்க ளின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இரா.சம்பந்தனுக்கு ஏற்பட் டுள்ள திடீர் உடல்நிலை பாதிப்பால் குறித்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள் ளது-என்றார். (எ-22)

## புதினம் தெரியுமோ

கூட்டமைப்பின் ஊடகப்பிரிவு என்ற பெயரில் வெளியான பதிவுக்குச் சொந்தமான கணக்கில் இவ்வாறு உறுதிசெய்யப்பட்ட அடையாளம் இல் லை. ஆகவே அதனைக் கூட்டமைப் பின் உத்தியோகபூர்வ அறிவிப்பாகக் கொள்ளமுடியாது. இரண்டாவதாக இப்படி ஒரு பெயரில் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ ஊடகப்பிரிவு இயங்கு வதாக கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்ற மூன்று கட்சிகளின் தலைவர்களுக்குக் கூடத் தெரியாது. அவர்கள் யாரோ கூட்டமைப்பின் அனுதாபிகள் இப்படி ஒரு 'கள்ளப்பெயரில்' அந்தக் கணக் கைப் பேணுவதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாவதாக, தமிழரசுக் கட்சியின் முக்கிய புள்ளி ஒருவரே இப்படி கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு என்ற பெயரில் கண்ணாமூச்சி யாட்டம் காட்டியிருக்கிறார் என்பதே பலரதும் ஊகம். ஏனெனில் அவரைப் புகழ்ந்தேற்றும் செய்திகளும், அவ ருக்கு எதிரானவர்களுக்கு பதிலடி கொடுக்கும் பதிவுகளுமே அந்தக் கணக்கில் வந்துள்ளன. மாறாக ஒரு கட்சியின் ஊடகப்பிரிவுக் கணக்காக அது செயற்பட்டதில்லை. எனவே போலிகளைக் கண்டு ஏமாறாதி ருப்போம்!!

இப்படிக் கள்ளக்கணக்கில் கூடியாடு வோரைக் கூட்டமைப்பு கண்டுபிடிக்கா விட்டால், குறித்த ருவிட்டரில் போடப் படும் எல்லாப் பதிவுகளும் கூட்டமைப் பின் தலையில் பழிகளாகச் சுமத்தப்பட்டு விடும். எனவே கூட்டமைப்பு முந்திக் கொண்டு, அந்தப் பெயரிலிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். போலிகளின் முகத்திரையைக் களைந்தால்தான் இனியும் ஏமாறாதிருக்க முடியும்.

– பட்சி

## தருமபுரத்தில்...

சாரதிகள் இருவரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

அதேவேளை, மயில்வாகனபுரத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார். அவரிடம் இருந்து 20 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் உழவனூர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார். அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## இடைக்கால...

தால் எதிர்க்கட்சி இடைக்கால கணக்கறிக்கை மீது வாக்கெடுப்பைக் கோராது என தெரியவருகின்றது. அதேவேளை, நாடாளுமன்றத்தி லுள்ள ஏனைய சில தெரிவுக்குழுக்க ளுக்கு இன்றும், நாளையும் உறுப்பி னர்கள் நியமிக்கப்படக்கூடும் என அறியமுடிகின்றது.

புதிய அரசின் 2021 ஆம் நிதியாண் டுக்கான வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நிதி அமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் திட்டமி டப்பட் டுள்ளது. (எ-44)

## மோசடிகள் தொடர்பில்:
# பொதுமக்களுக்கு விழிப்புணர்வு: சுங்க அதிகாரிகள் களத்தில்

கொழும்பு, ஓக.26



மோசடிகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு அருகில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

சில மோசடிக்காரர்கள் தொலைபேசி அழைப்புக்கள் , குறுஞ்செய்திகள் , மின்னஞ்சல்கள் , சமூக ஊடகப் பிரயோகங்கள் , அளவலாவல்கள் போன்ற வற்றை உபயோகித்து பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான மோசடிகளால் பாதிக்கப்படுபவர்கள் பெருந்தொகைப் பணத்தை இழப்பதுடன் மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். மோசடிக்காரர்கள் இலங்கைச் சுங்கத்தின் முகவரியிடப் பட்ட கடிதத் தாள்களையும் தொலைபேசி இலக்கங்களையும் உபயோகிப்பதோடு தாம் உண்மையானவர்கள் என்று நம்பச் செய்வதற்காக சில சந்தர்ப்பங்களில் சுங்க அதிகாரிகளின் பெயர்களைக் கூடப் பயன்படுத்துகின்றனர்.

இலங்கைச் சுங்கமானது இனந் தெரியாதோரின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்புச்செய்யுமாறு பொது மக்களுக்கு ஒருபோதும் அறிவிக்காது என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. (ரி3)

# வீடு திரும்பினர் 63 பெண்கள்

கொழும்பு, ஓக.26

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து நாட்டுக்கு வருகை தந்த 63 பெண்கள் தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர்.

முல்லைத்தீவில் விமானப்படையினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த இந்தப் பெண்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தமது தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடு திரும்பி யுள்ளனர் என விமானப்படை ஊட கப்பிரிவு தெரிவித்துள்ளது. (ரி3)



அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 93ஆவது பிறந்தநாள் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக இன்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபை முன்பாகவுள்ள அன்னாரின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திரு. அ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமாகிய சரவணபவன் கலந்து கொண்டார்.(எ)

# நீரில் மூழ்கிய நிலையில் மூதாட்டியின் சடலம் மீட்பு

புத்தளம், ஓக.26

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புழுதிவாயல் பகுதியில் உள்ள வாய்க்காலில் நீரில் மூழ்கிய நிலையிலிருந்த வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் முந்தல் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கணமூலைகுறிஞ்சா வெட்டை பகுதியைச் சேர்ந்த 71 வயதான நான்கு பிள்ளைகளின் தாய் என இனங் காணப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி3)

# நிந்தவூர் பிரதேச சபையில் 3 உறுப்பினர்கள் இராஜினாமா

அம்பாறை, ஓக.26

நிந்தவூர் பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்கள், தமது உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர்களான எம்.ஏ.மஜீத், எம்.எம்.சம்சுதீன், ஏ.றிபானா ஆகிய மூவருமே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை அமர்வில் தமது இராஜினாமா கடிதத்தை வழங்கியுள்ளனர். தமது கட்சியின் கோரிக்கையின்படி கட்சிக் கட்டுப்பாட்டுடன் மேலும் மூன்று கட்சி வேட்பாளர்களுக்கு உறுப்பினராகும் சந்தர்ப்பம் வழங்கும் வகையிலேயே தாம் உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்வதாக அவர்கள் சபை அமர்வில் தெரிவித்தனர். (ரி3-30)





# 'அனர்த்த அபாயக் குறைப்பு திட்டம்' தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஓக.26

அனர்த்த அபாயத்தைக் குறைக்கும் முகமாக சொன்ட் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டிசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய மூன்று பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனர்த்த அபாயக் குறைப்புத் திட்டத்திற்கான இரண்டாவது கலந்துரையாடல், நேற்று செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதேச செயலகங்களில் வளவாளர் குழு ஒன்றினை உருவாக்கி அவர்களுக்கு மூன்று நாள்கள் பயிற்சியளித்தல், தெரிவு செய்யப்பட்ட ஒன்பது கிராமங்களுக்கான முன்திட்டமொழி ஒன்றை உருவாக்குதல், கிராம மட்டங்களில் உருவாக்கப்பட்ட முன்மொழிவுகளை பிரதேச மட்டத்திற்குரியதாக ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் ஊடாக இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கலந்துரையாடலில் சொன்ட் நிறுவன பணிப்பாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச சபை செயலாளர்கள், தவிசாளர்கள், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ரி3-222)



# 2 தலைகள் 4 கண்களுடன் அதிசய ஆட்டுக்குட்டி

புத்தளம், ஓக.26

புத்தளத்தில் இரண்டு தலைகள், 4 கண்களுடன் அபூர்வ ஆட்டுக்குட்டியொன்று பிறந்துள்ளது.

புத்தளம் ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் வீட்டில் வளக்கப்படும் ஆடு நேற்றுக் காலை இந்தக் குட்டியை ஈன்றுள்ளது. இந்த ஆட்டுக்குட்டியுடன் மேலும் இரு குட்டிகள் பிறந்துள்ளன.

இந்த ஆட்டுக்குட்டி மிகவும் ஆரோக்கியமாக உள்ளது என்று அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

விசித்திரமான தோற்றத்துடன் பிறந்துள்ள இந்த ஆட்டுக்குட்டியை அந்தப் பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டுச் செல்கின்றனர். (ரி1)

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# கண்ணாடிப் போத்தலுக்கு மாற்றீடாக மண் குவளை

கொழும்பு, ஓக.26

கண்ணாடிப் போத்தல்களுக்குப் மாற்றீடாக களி மண் குவளை களை அறிமுகப்படுத்த அரசாங் கம் தீர்மானித்துள்ளது. அதன் படி இலங்கையில் அலுவலகங் கள், வாகனங்கள் மற்றும் வீடுக ளில் குடிநீர் சேமித்து வைப்ப தற்கு மண் குவளைகள் பயன்ப டுத்தப்படவுள்ளன. இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக் கும், புகையிலை மற்றும் மதுசா ரம் தொடர்பான தேசிய ஆணை யத்திற்கும் இடையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கண்ணாடிப் போத்தல்களை பயன்படுத்துவத னால் பல்வேறு சுகாதார பிரச்சி னைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு கள் உள்ளன என ஆணையத் தின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். புதிய சுவையுடன் நீரைக் குடிக்கக்கூடிய வகையில் களி மண் போத்தல்கள் உருவாக்கப் படவுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதே வேளை தற்போது நீர் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படும் கண்ணாடிப் போத்தல்களில் பெரும்பாலானவை மதுபானப் போத்தல்கள் எனவும் தெரிய வந்துள்ளது. (ரி1)



# நெல்லியடி நகரில் முச்சக்கர வண்டிகள் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஓக.26

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டிகள் நேற்று செவ்வாய்க்கிழமை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி உட்படப் பொலிஸ் குழுவினர் மற்றும் கரவெட்டி பிரதேச சபையினர் இணைந்து இப் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தெரிவிக்கையில்,

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள சில முச்சக்கர வண்டிகள், வாடிக்கையாளருக்கு தரமற்ற சேவை வழங்குவதாக பிரதேச சபைக்கு பொதுமக்களால் முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இதனடிப்படையில் தொடர்ந்து, முச்சக்கர வண்டிகளின் பராம ரிப்பு இன்மை, அதிக புகை, அதிக ஒலி, பொருத்தமற்ற இருக்கைகள், அதிகளவு அதிர்வுடன் கூடிய இயந்திர இயக்கம் போன்றன தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

30 முச்சக்கர வண்டிகளில் 12 முச்சக்கர வண்டிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு பொருத்தமான வண்டிகளுக்கு சான்றிதழ்க ளும் வழங்கப்பட்டன. குறைபாடுள்ள முச்சக் கரவண்டிகளுக்கு கால அவகாசம் வழங்கப் பட்டுள்ளது. அவை மீண்டும் பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டு எதிர்வரும் 1ம் திகதி முதல் பாவனைக்கு விடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது- என்றார். (ரி3-422)




இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன கிளி நொச்சி கிளையின் வாடிக்கையாளரான "Sun Furny City " நிறுவனத்துக்கு அண்மை யில் ஏற்பட்ட தீ விபத்துக்கான இழப்பீட டுத் தொகையாக ரூபா 12,256,415.58 இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தால் அண்மையில் வழங்கப்பட்டது. (ரி3-9)

# நுண்நிதிக் கடன் பாதிப்பு தொடர்பில் அரசு கரிசனை

கொழும்பு, ஓக.26

நுண்நிதிக் கடனால் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடர்பில் அரசாங்கம் அதீத கரிசனை செலுத்தியுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கடன் வழங்கும் நிறுவனங்களின் செயற்பாட்டு மாற்றம் தொடர்பில் அரசாங்கம் கண்காணித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நுண்நிதிக் கடன் நிறுவனங்களை மூடிவிட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேம சிங்க தெரிவித்துள்ளார். தற்போது நிதி நிறுவனங்கள் ஊடாக அறவிடப்படும் அதிக வட்டியைக் குறைப்ப தற்கும் இதற்கான தீர்வை வெகுவிரைவில் பெற்றுக் கொடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி1)

# உயிரிழந்த கருஞ்சிறுத்தை தேசிய அருங்காட்சியகத்தில்



கடந்த மே மாதம் லக்சபான வாழமலைத் தோட்டத்தில் பொறி யில் சிக்கி உயிரிழந்த கருஞ்சிறுத்தையின் சடலம் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு வனவி லங்கு அமைச்சிடம் விடுத்த கோரிக்கையின் பேரில், சிறுத்தை மரணம் தொடர்பான நீதிமன்ற விசார ணைகள் முடிந்தவுடன் கருஞ்சிறுத்தையின் சடலத்தை அருங்காட்சியகத்துக்கு அனுப்ப முடிவு செய்யப் பட்டது என வனவிலங்கு பாதுகாப்புத் துறை பணிப் பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரிய பண்டார தெரிவித் தார்.


கடந்த மே மாதம் 29 ஆம் திகதி நல்லத்தண்ணி லக்சபானா தோட்டத்தின் வாழமலைப் பகுதியில் வலையில் சிக்கி காயமடைந்த நிலையில் வனவி லங்கு அதிகாரிகளால் மீட்கப்பட்ட குறித்த கருஞ்சிறுத்தை, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள கருஞ்சிறுத்தையின் சடலத்தி னைப் பார்வையிடுவதற்காக கடந்த வெள்ளிக்கி ழமை அருங்காட்சியகத்திற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)





பண்டார வன்னியனின் வெற்றி நாள்நினை வும் மறைந்த தலைவர் தங்கத்துரையின் 72 வது பிறந்தநாள் நினைவேந்தலும் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6:00 மணியள வில் வல்வெட்டித்துறை நகர சபை மண்ட பத்தில் நடைபெற்றது. நிகழ் வுக்கு வல் வெட்டித்துறை நகரசபைத் தலை வர் கோ. கருணானந்தராசா தலைமை தாங்கி னார். நிகழ்வில் நினைவுரைகளை தமிழ் மக்கள் கூட்டணியின் பேராசிரியர் வி.பீ சிவநா தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களான சுரேஸ் பிறேமச்சந்திரன், எம்.கே சிவாஜிலிங்கம்,ந.சிறிகாந்தா, வட மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் உட்பட பலர் நிகழ்த்தினர். (ரி3-20)




# மேலும் 12 பேருக்கு கொரோனாத் தொற்று

நாட்டில் மேலும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள் ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய 12 பேருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள் ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,971 ஆக அதிகரித்துள்ளது. தொற்றுக் குள்ளான 143 பேர் தொடர்ந்தும் நாடு முழுவதும் உள்ள 9 வைத்தியசாலைக ளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். 62 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத் தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளனர்.

அத்துடன், இதுவரை தொற்றுக்குள்ளான 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2,816 பேர் குணமடைந்தும் உள்ளமை குறிப் பிடத்தக்கது. (ரி3)

# ஹெரோய்ன், துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

ரத்கம பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் துப்பாக்கிகளுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தேகொட பகுதியில் நேற்று செவ்வாய்கிழமை குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான நபரிடமிருந்து 6 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் , ரி-56 துப்பாக்கிகள் இரண்டு, அதன் தோட்டாக்கள் 82 , மற்றும் 9 மில்லி மீட்டர் துப்பாக்கிகள் இரண்டு, அதன் தோட்டாக்கள் 39 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட இந்த சட்டவிரோத பொருள்கள் அனைத்தும் பூஸ்ஸ சிறைச்சாலையில் சிறை வைக் கப்பட்டுள்ள பாதாளக்குழு உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமானதாக இருக்கலாம் என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ரி3)

# கேள்வி இருந்தும் உற்பத்தி குறைவு

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.26

இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 250,000 தொன் உருளைக் கிழங்குக்கு கேள்வி உள்ளது. எனினும் நாட்டில் 80ஆயிரம் தொன் உருளைக்கிழங்கே உற்பத்தி செய்யப்படுகிறது என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

நெல் மற்றும் தானிய உற்பத்தி தொடர்பான இராஜாங்க அமைச்சு அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். உள்ளூர் உருளைக்கிழங்கின் உற்பத்தியை அதிகரிக்கும் வழிவகைகளை ஆராயுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதன்மூலம் உருளைக்கிழங்கின் இறக்குமதியைக் குறைத்து நாட்டின் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி உருளைக்கிழக்கு செய்கையாளர்களுக்கு உரிய ஊக்கம் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (ரி1)



அம்பாறை நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் சமூகத் தொடர்புள்ள சிகை அலங்கார நிலையங்களில் தொழில் புரிவோர், ஆட்டோ சாரதிகள், உணவகங்களில் பணிபுரிவோர் உட்பட பல தரப்பினருக்கு கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைகளின்படி எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றில்லை என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். தஸ்லீமா பசீர் தெரிவித்துள்ளார். (ரி3-30)

# இலங்கையின் முதல் ரோபோ இனிமேல் தாமரைக் கோபுரத்தில்

கொழும்பு, ஓக.26

இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது மானுடவியல் உயர் தொழில்நுட்ப ரோபோவான டையசன் அண்மையில் தாமரைக் கோபுரத்திற்கு விஜயனம் மேற்கொண்டுள்ளது . அரிமெக் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்த ரோபோ தொடர்பில் அந் நிறுவனத்தின் தலைவர் சமீரா பிரசாத் ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், டையசன் ரோபோவை உருவாக்க சுமார் மூன்று ஆண்டுகள் ஆகின. இது தெற்காசியாவின் மிக உயரமான ரோபோ. டையசன் எதிர்காலத்தில் தாமரைக்கோபுரத்தில் வரவேற்பாளராக இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி1)



# சுற்றாடல் செய்தித்தாளுக்கு ஆக்கங்கள் கோரல்

கொடிகாமம், ஓக. 26

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்தித்தாள் ஆண்டுதோறும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இம்முறையும் கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் முன்னோடிகளின் ஆக்கங்களை தாங்கி செய்தித்தாள் 2020 இனை நவீன முறையில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

எனவே பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட சுற்றாடல் ஆய்வுக்கட்டுரை, தற்கால சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் தீர்வு உத்திகள், சுற்றாடல் கவிதை, சுற்றாடல் சார்ந்த குறுக்கெழுத்து, சுற்றாடல் வாசகங்கள், பாடசாலை மட்ட சுற்றாடல் காப்பு விசேட சுற்றாடல் நிகழ்ச்சி பற்றிய விடயங்கள் ஆகியவற்றை அனுப்ப முடியும் .எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-159)

## கொவிட்19 பரவலினால்

# நாடு திரும்பிய குடும்பங்களுக்கு ஆஸ்திரேலிய அரசு உதவிகள்

கொழும்பு, ஓக.26

கொவிட்-19 பரவல் காரணமாக வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய குடும்பங்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

அனுராதபுர மாவட்டச் செயலாளரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியுடன் வழங்குவதற்கு சர்வதேச குடிப்பெயர்வு தொடர்பான அமைப்பின் இலங்கை அலுவலகம் தீர்மானித்துள்ளது. இதன்படி அனுராதபுரத்திலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உணவுப்பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் போன்றன நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சர்வதேச குடிப்பெயர்வு தொடர்பான அமைப்பினால் விநியோகிக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வேலை இழப்பு காரணமாக தமது குடும்பத்தவருக்கு உணவளிப்பதற்குக் கூட பெரும் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றனர் என இவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு திரும்பிய குடும்பங்கள் மற்றும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் மேலும் சில குடும்பங்க ளுக்கும் மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அநாதை இல்லங்களில் வசிப்போர், விசேட தேவையுடையவர்கள், வயது முதிர்ந்தவர்கள், பாலியல் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக சுமார் 800 பேர் இத் திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

இதேவேளை கொவிட்19 வைரஸ் பரவல் காரணமாக பாதிப்பிற்குள்ளான அனுராதபுரத்தைச் சேர்ந்த குடும்பங்களின் உணவு மற்றும் சுகாதார தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான இந்த ஆக்கபூர்வமான திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்' என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி தெரிவித்துள்ளார். (ரி3)

# அடகு நிலையத்தில் நகைகள் கொள்ளை

கொழும்பு, ஓக.26

தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் நிலையம் ஒன்றில் இரண்டு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதி கொண்ட தங்க ஆபரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை பெலெக்கடே சந்தியில் உள்ள இரு மாடிக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் உள்ள, தங்க ஆபரண அடகு வைக்கும் நிலையத்திலேயே நேற்றைய தினம் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ரி1)

## 14 மில்லியன் பெறுமதியான

# கொரோனாப் பரிசோதனைக் கருவி கொழும்பு பல்கலைக்கு அன்பளிப்பு



கொழும்பு, ஒக.26

அமெரிக்காவின் நிதியுதவியில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தால் கொரோனாப் பரிசோதனைக் கருவி கொழும்பு பல்கலைக்கழ கத்திற்கு கடந்த ஜூன் மாதம் 15ஆம் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது என அமெ ரிக்கத் தூதரகம் செய்தி வெளி யிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

14 மில்லியன் ரூபா மதிப்புடைய இந்தக் கருவி கொரோனாச் சோதனைக்கு பயன்படுத்தப் பட்ட மிகவும் நம்பகமான மற்றும் திறமையான தொழில் நுட்பம் மற்றும் அத்தியாவசிய பாதுகாப்பு கருவிகளைக் கொண் டுள்ளது. இதன் மூலம் 2,000 சோதனைகளை மேற்கொள்ளமு டியும் என அமெரிக்கத்தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின பீடாதிபதி பேராசிரியர் வஜிர திஸாநாயக்க, இந்தக் கருவிகள் கொரோனாப் பரிசோதனைச் செயற்பாடுகளை வலுப்படுத்த உதவும். இந்த நன்கொடைக்கு சர்வதேச மற்றும் இலங்கை அணுசக்தி அதிகாரிகள் மற்றும் அமெரிக் கத் தூதரகத்திற்கு நாம் கடமைப் பட்டுள்ளோம் எனத் தெரிவித் துள்ளார். ஏற்கனவே இலங்கை மற்றும் சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே ஏற்பாடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்தக் கருவியை இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கண்டி தேசிய மருத்துவமனை ஆகியவை பயன்படுத்தவுள்ளன. இவற்றைப் பாதுகாப்பாக பயன்படுத்துவதற்காக உள்ளூர் பணியாளர்களுக்கு சர்வதேச அணுசக்தி நிறுவனத்தால் பயிற்சி கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## நாடாளுமன்ற தகவல் திரட்டின் முதலாவது இதழ் வெளியீடு

கொழும்பு, ஒக.26

நாடாளுமன்ற செயற்பாடுகளின் தகவல்கள் அடங்கிய நாடாளுமன்றத் தகவல் திரட்டின் முதலாது இதழ் நேற்று நாடாளுமன்றில் வெளியிடப்பட்டது.

நாடாளுமன்றத் தகவல் தொடர்பு திணைக்களம் இந்த நூலை வெளியிட் டுள்ளது. நாடாளுமன்றத்தின் செயற்பாடு கள், சம்பிரதாயங்கள், சட்டதிட்டங்கள் என இந்த நூலில் பல விடயங்கள் உள்ள டக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற செய லாளர் தம்மிக்க தசநாயக்க இதழின் முதலா வது பிரதியை பிரதமர் மகிந்த ராஜபக்சவி டம் கையளித்துள்ளார். இந்த நிகழ்வில் சபா நாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்ப லாப்பிட் டிய உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ரி1)

## கிணற்றுக்குள் வீழ்ந்து வயோதிபப் பெண் சாவு

கொழும்பு, ஒக.26

வெள்ளவத்தை அலுவலவத்த பிரதே சத்தில் கிணற்றுக்குள் வீழ்ந்த வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார். பெண்ணொரு வர் கிணறொன்றில் வீழ்ந்துவிட்டார் என தொலைபேசி ஊடாகப் பொலி ஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து மேற்கொண்ட விசார ணைகளில் அந்தப் பெண் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளமை தெரியவந்துள் ளது. சம்பவத்தில் 81 வயதுடைய பெண் ணொருவரே உயிரிழந்துள்ளார். (ரி1)

## 18 குற்றச் செயல்களில் தேடப்பட்டவர் கைது

கொழும்பு, ஒக.26

பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர், எப்பாவல, இஹல ஹல்மில்லேவ பகுதியில் கைதுசெய்யப் பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பி ரிவு தெரிவித்துள்ளது. பெண் ஒருவரை துஷ்பிரயோகம் செய்தமை உள்ளிட்ட 18 குற்றங்களில் தேடப்பட்ட அந்த நபர் மோட்டார் வாகனத்தில் பயணித்த சந்தர்ப்பத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய் யப்பட்டுள்ளார். இதன் போது, மோட்டார் வாக னத்தில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டி ருந்த மைக்ரோ ரகத் துப்பாக்கி, மெகசின் மற்றும் 3 ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர் கோனஹேன பகுதி யைச் சேர்ந்த 39 வயதுடை யவர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. பொலிஸார் சந்தேகநபரிடம் விசார ணைகளை முன்னெடுத் துள்ளனர். (ரி1)

## மஞ்சள் மீட்பு

கொழும்பு, ஒக.26

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டது எனச் சந்தேகிக் கப்படும் 1004 கிலோ கிராம் மஞ்சள் கடற்படையால் மீட்கப் பட்டுள்ளது. இந்த மஞ்சள் தொகை கற்பிட்டி ஏத்தால பிரதேசத்தில் வைத்து நேற்று மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



## மரஆலையில் தீப் பரவல்

மட்டக்களப்பு, ஒக.26

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி ஆற்றங்கரை வீதியில் அமைந்துள்ள மர ஆலையொன்றில் இன்று அதிகாலை 2 மணியளவில் தீப்பரவல் ஏற்பட்டுள் ளது. தகவல் அறிந்த தீயணைப்பு படை யினர் சம்பவ இடத்திற்குச் சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தீப்பரவலுக்கான காரணம் தொடர்பில் அறியப்படவில்லை, ஐம் பது லட்சம் ரூபாய் பெறுமதியான மரங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள் ளன அதன் உரிமையாளர் தெரிவித்தார். மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ரி1-46)

## 426 இலங்கையர்கள் தாயகம் வந்தடைவு

கொழும்பு, ஒக.26

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டிற்கு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் தங்கியிருந்த 426 இலங்கையர்கள் நாடு திரும்பி யுள்ளனர்.

அவர்கள் இன்று காலை மத்தல மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங் களை வந்தடைந்தனர். கட்டாரில் இருந்து 296 பேரும், ஜேர்மனில் இருந்து 102 பேரும் ஐக் கிய அரபு இராச்சியத்தில் இருந்து 23 பேரும் இவ்வாறு நாடு திரும்பி யுள்ளனர். அவர்கள் அனைவரையும் பி.சீ.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி1)




## 32 ஆயிரத்து 816 பேருக்கு தனிமைப்படுத்தல் நிறைவு

கொழும்பு, ஒக.26

தனிமைப்படுத்தல் நடவ டிக்கையை பூர்த்தி செய்த 32 ஆயிரத்து 816 பேர் வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கொரோனாத் தடுப்பு தேசிய மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் 65 தனிமைப்படுத் தல் மத்திய நிலையங்களில் 7058 பேர் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டுள் ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. இதேவேளை, நேற் றைய தினம் 1580 பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# கறுப்பினத்தவர் மீது சூடு: பற்றி எரிகிறது அமெரிக்கா






நியூயோர்க், ஓக.26

அமெரிக்க விஸ்கோன்சின் மாநிலத்தின் கொனோஷாவில் கறுப்பினத்தவர் ஒருவர் பொலிஸாரினால் சுடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் கெனாஷா நகரில் உள்ளூர் பிரச்சினை தொடர்பாக ஜக்கப் பிளேக் என்ற கறுப்பினத்தவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஜேகொப் பிளேக், ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். இந்நிலையில் கெனோஷா நகரில் அவர் காரில் ஏற முற்படுகையில் பின்புறமாக 7 தடவை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகும் காணொளிகள் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. துப்பாக்கிச்சூடு மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரைக் கண்டித்தும், இன மற்றும் நிறவெறிக்கு எதிராகவும் அமெரிக்காவில் போராட்டங்கள் வெடித்துள்ளன. இதில் கட்டிடங்கள் பல அடித்து நொறுக்கப்பட்டதுடன் வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. கலவரம் காரணமாக கெனோஷா கவுண்டியில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினமன்று இரவு நூற்றுக்கணக்கான மக்கள் பொலிஸ் தலைமையகத்தில் திரண்டு வாகனங்களுக்குத் தீ வைத்ததுடன் "நாங்கள் பின் வாங்க மாட்டோம்" என்று கூச்சலிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## சீரியல் நடிகை சித்ராவுக்கு விரைவில் டும்டும்டும்!



நிகழ்ச்சி தொகுப்பாளராக அறிமுகமான சித்ரா, பின்னர் சீரியலில் நடித்து பிரபலமானார். தற்போது இவர் நடித்து வரும் 'பாண்டியன் ஸ்டோர்ஸ்' சீரியல் இவரை மேலும் பிரபலமாக்கியது. இதன்மூலம் இவருக்கென தனி ரசிகர் பட்டாளமே உருவானது. சமூக வலைதளங்களிலும் ஆர்வமாக இருக்கும் சித்ரா அவ்வப்போது போட்டோஷூட் நடத்தி புகைப்படங்களை பதிவிட்டு வருகிறார். அந்த வகையில், சமீபத்தில் திருமண கோலத்தில் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்திருந்தார்.

ரசிகர்களோ இதுவும் போட்டோஷூட் புகைப்படம் தான் என நினைத்திருக்க, அதுவோ அவரது நிச்சயதார்த்தத்திற்கு தயாரான புகைப்படமாம். பின்னர் மணமக்கள் இருவரும் மேடையில் கழுத்தில் மாலையுடன் இருக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகின. சித்ராவுக்கும், ஹேமந்த் என்ற தொழிலதிபருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளது. இதில் குடும்பத்தினர் மட்டும் கலந்து கொண்டுள்ளனர், இந்த ஆண்டு இறுதிக்குள் சித்ராவின் திருமணம் நடைபெற இருப்பதாகக் கூறப்படுகிறது.

## தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளைகள்

நடிகர் தனுஷ் தனது மகன்களான யாத்ரா மற்றும் லிங்காவுடன் மாடியில் இருக்கும் புகைப்படம் ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

தனது மூத்த மகன் தன் ரீசேட்டை அணியும் அளவுக்கு வளர்ந்துவிட்டதாக ஆச்சரியத்துடன் அந்தப் புகைப் படத்தை அவர் வெளியிட்டுள்ளார். உண்மையில் அவரைப் போலவே அவரது ரசிகர்களும் இந்தப் புகைப்படத்தைப் பார்த்து ஆச்சரியம் அடைந்துள்ளனர். தனுஷுக்கு இவ்வளவு பெரிய மகன்கள் இருக்கி றார்களா? என அந்தப் புகைப்படத்தைப் பார்த்து அவர்கள் ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர். தற்போது சமூக வலைத்தளத்தில் இந்தப் புகைப்படம் வைரலாகி வருகின்றது.





# காங்கிரஸ் தலைவராக தொடர்ந்தும் சோனியா

இந்தியத் தேசிய காங்கிரஸின் இடைக்காலத் தலைவராக சோனியா காந்தி நீடிக்கவுள்ளார்.

7 மணித்தியாலங்களாக இடம்பெற்ற காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. கட்சியின் இடைக்காலத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக சோனியா காந்தி அறிவித்ததைத் தொடர்ந்து, சோனியா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது.

காங்கிரஸ் கட்சிக்கு முழுநேர வெளிப்படையான தலைமைத்துவம் அவசியமென வலியுறுத்தி, 20 இற்கும் அதிகமான சிரேஷ்ட உறுப்பினர்கள் கடிதம் அனுப்பியதை அடுத்தே, அவர் இந்தப் பதவி விலகல் அறிவிப்பை வெளியிட்டிருந்தார். எனினும் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டத்தின் நிறைவில் தாம் தலைமை பதவியில் நீடிப்பார் எனத் தெரிவித்திருந்துள்ளார். (ரி1)

### காலநிலை மாற்றத்துக்காக
# முழுக்குப் போட்ட கல்வியை மீண்டும் தொடரும் மாணவி



ஸ்டொக்ஹோம், ஓக.26

சுற்றுச்சூழலைக் காப்பதற்காக தனது ஒரு வருடக் கல்வியை தியாகம் செய்த மாணவி மீண்டும் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ளார்.

சுவீடனைச் சேர்ந்த சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரும் மாணவியுமான க்ரேட்டா துன்பெர்க் (வயது- 17)காலநிலை மாற்றத்துக்கான பிரசார நடவடிக்கைகளுக்காக 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து - கடந்த ஒரு வருடங்களாக - பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் பாடசாலை செல்லத் தொடங்கியுள்ளார்.

க்ரேட்டா துன்பெர்க் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், பாடசாலையிலிருந்து பிரிந்திருந்து ஒரு ஆண்டு முடிந்து விட்டது, இறுதியாக மீண்டும் பாடசாலை செல்ல மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது எனப் பதிவிட்டுள்ளார். (ரி1)



# இளந்தாரகைக்கு வெற்றிக் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஓக.26

சுதந்திரபுரம் முல்லை ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட மென் பந்துக் கிரிக்கெட் தொடரில் தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழகம் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இறுதியாட்டத்தில் ரெட்பானா புதிய பாரதி அணியும், தர்மபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழக அணியும் மோதின. ஆட்டத்தில் க.றொபேட் ஆட்டநாயகனாகவும், சௌ.கீர்த்தீபன் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.(எ)

# கௌரவிப்பு

கரணவாய், ஓக.26

யாழ்ப்பாணம் மாவட்டக் கடினப் பந்துக் கிரிக்கெட் அணியிலும், பொலிஸ் பிறிமியர் அணியிலும் விளையாடும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவரும், தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய விளையாட்டுப் பயிற்றுவிப்பாளருமான தவராஜா பிரதீப் கே.பி. பவுண்டேசனால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

கே.பி. பவுண்டேசன் சார்பாக, ஓய்வுநிலை நிர்வாகக் கிராம அலுவலர் தி.வரதராஜனால் 32 ஆயிரம் ரூபா பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன. (எ-108)





# வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீயாக இரு

## அன்னை தெரசாவின் 110வது பிறந்த நாள் இன்று

நீலநிறக் கரைபோட்ட வெள்ளைக் கைத்தறிச் சேலை. சுருக்கங்கள் நிறைந்த முகம். கருணை பொங்கும் விழிகள். இன, மத, பிரதேச வேறுபாடற்ற சேவை மனப்பாங்கு. இவற்றின் மொத்த உருவமாகத் திகழ்ந்த அன்னை தெரசா 'உலகின் சாதனைப் பெண்'களில் இன்று இடம்பெறுகின்றார்.

1910 ஒகஸ்ட் 26 மெஸிடோனியாவில் பிறந்த அல்பேனிய இனத்தவரான இவரது இயற்பெயர் அக்னஸ் கொன்ஸா பொஜாக்கியு (Agnes Gonxha Bojaxhiu) என்பதாகும். அல்பேனிய மொழியில் Gonxha என்பதன் பொருள் ரோசா மொட்டு அல்லது சின்னஞ்சிறு மலர் என்பதாகும்.

சிறுவயது முதல் ஆழ்ந்த இறைபக்தியும் பொதுத் தொண்டில் மிகுந்த ஆர்வமும் கொண்ட இவர், தனது 18 ஆவது வயதில் ஐரிஷ் கன்னிகாஸ்திரிகளைக் கொண்ட லொரேட்டா கத்தோலிக்க கன்னிகா மடத்தின் உறுப்பினரானார். கல்கத்தாவில் இந்திய மிஷனரிகள் செய்துவந்த சமூகத் தொண்டுகளின் பால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். எனவே, டுப்ளினில் சில மாதங்கள் பயிற்சி பெற்றபின் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அதன்பின் ஆன்மீகக் கற்கையைத் தொடரும்முகமாக அயர்லாந்து சென்றார். 1931 ஆம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்று அன்னை தெரசாவானார்.

அன்னை தெரசா 1931-1948 ஆண்டுவரை கல்கத்தா புனித மேரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியைத் தொடங்கினார். 1948 ஆம் ஆண்டு பாட்னாவில் மருத்துவத் தாதிப் பயிற்சியைப் பெற்றார். 1949 இல் மோதிஜில் என்ற சேரிப்பகுதியை அடைந்து, "உங்களுக்குத் தொண்டு செய்யவே நான் இங்கு வந்துள்ளேன். உதவி செய்ய என்னை அழைப்பீர்களா?" என்று கேட்டவாறு சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினார். 1950 அக்டோபர் 7 இல் அன்னை தெரசாவின் தலைமையில், மிஷனரிஸ் ஓஃப் சாரிட்டி இல்லம் (Missionaries of Charity) தொடங்கப்பட்டது. 1965 இல் இந்த அமைப்பு சர்வதேச அளவில் வியாபகம் பெற்றது.

**பிறந்தது:** யூகோஸ்லோவியாவில் உள்ள ஸ்கோப்ஜி நகரம்.

**பிறந்த திகதி:** 26.08.1910

**இயற்பெயர்** : ஆக்னஸ் கோஞ்செ பொயாஜியூ (Agnes Gonxha Bojaxhin).

**செல்லப்பெயர்** : கோன்ஸா

**தந்தையின் பெயர்:** நிகோலா பொயாஜியூ (Nikola Bojaxhin).

**தாயின் பெயர்:** திரானி பேர்னாய் (Drane Bernai)

**உடன் பிறந்தவர்கள்** : அக்கா அகா (Aga) மற்றும் அண்ணன் லாஸர் (Lasar).

சேரிவாழ் ஏழை மக்களுக்கும் அநாதைகளுக்கும் தொழு நோயாளர்களுக்கும் அவர் செய்துவந்த தொண்டுகள் அளப்பரியன. "ஏழை நோயாளர்களுக்கு வெறுமனே உபதேசம் செய்பவராக மட்டும் அன்னை தெரசா இருக்கவில்லை. மாறாக, அவர்களுடன் இணைந்து தமது வாழ்நாட்களை எல்லாம் அவர்களுக்காகவே செலவிட்டவர். தமக்கென்று எதையும் சேர்த்து வைக்காமல், எளிய வாழ்க்கை நடத்தியவர்" என்று பத்திரிகையாளரான குஷ்வந்த்சிங், அன்னை தெரசாவின் தொண்டு பற்றிப் புகழ்ந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1962 ஆம் ஆண்டு பொதுச் சேவைக்கான இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி, 1979இல் அமைதிக்கான நோபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. அவரின் இடையறாத சமூகத் தொண்டை கௌரவிக்கும்முகமாக 1980 இல் இந்தியாவின் அதிஉயர் விருதான பாரத ரத்னா விருதும், 1983 இல் பிரிட்டிஷ் மகாராணி 2ஆம் எலிசபெத் மகாராணியின் கௌரவ விருதும் அன்னை தெரசாவைத் தேடி வந்தன. 1997 ஆம் ஆண்டு முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி பில் கிளிண்டன் அமெரிக்காவின் கௌரவ பிரஜை உரிமை அந்தஸ்தை வழங்கி அன்னை தெரசாவைக் கௌரவித்தார். சுமார் 45 வருடகாலம் சமூகப் பணிகளில் மிகுந்த அர்ப்பணிப்போடு ஈடுபட்டுவந்த அன்னை தெரசா 1983 ஆம் ஆண்டு இதய நோயால் பாதிக்கப்பட்டார். 1997 செப்டெம்பர் 05 ஆம் திகதி கல்கத்தாவில் உயிர் நீத்தார்.

# கரப்பந்தாட்ட போட்டிகள் 28இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணம் மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 2020ஆம் ஆண்டுக்கான போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிகள் அச்சுவேலி விக்னேஸ்வரா மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள் ளன. முதலில் "பி" பிரிவு அணிகளுக்கிடையிலான லீக் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. அதில் 15 கழகங்கள் மோதுகின்றன.

28ஆம் திகதி இரவு 7 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் அணி மோதுகின்றது. இரவு 8 மணிக்கு அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதுகின்றது. இரவு 9 மணிக்கு அச்சுவேலி யூத் அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் அணி மோதுகின்றது. (எ-422)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 26.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.